# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க,

## பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

---

**[2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, திசெம்பர் மாதம் 26 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2025 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்)

[2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 13/2025

## 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** 2023 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும் 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் பிரிவு 2 இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:- 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், “பத்து சதவீதத்திலான அறவீடு ஒன்று; அல்லது” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பத்து சதவீதத்திலான அறவீடு ஒன்று;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், “2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்குப் பதினைந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று;” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால், 2026, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் ஆண்டுக்குப்

பதினைந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று; அல்லது” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(ஈ) 2026, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் ஆண்டுக்குப் பதினெட்டு சதவீதத்திலான அறவீடு ஒன்று,” ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1அஅ) என்னும் உட்பிரிவின் பந்தி (ஆ) இல் “ஐம்பது ஐக்கிய அமெரிக்க டொலர்களை” எனும் சொற்களுக்கு பதிலாக “நூறு ஐக்கிய அமெரிக்க டொலர்களை” என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை ''பிரகாசன பியச'', அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்